# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


வருகிறது!

மறைக்கல்வித் தினமும்
கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின்
திருவிழாவும் — 6-6-1971


96-ம் புத். | 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 17-ம் இல


# மாபெரும் மறைக்கல்வி விழா

உலகின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தோள்கொடுத்து நிற்கும் தொழிலாளத் தோழர்களின் திருநாளை இல்லை, பெருநாளை அன்றோ மே திங்கள் முதல்நாள் கொண்டாடி மகிழ்ந்தோம். உடல் உழைப்பின் பெருமையை, உழைப்பாளியின் மகிமையை உலகிற்கு உணர்த்தும் நாள் உண்மையிலேயே மக்கள் கொண்டாடி மகிழவேண்டிய ஒப்பரிய நாள்தான்.

ஆனால், இதைவிட ஒரு திருநாள் பெருநாள் இருக்கின்றதென்றால், ஆம் அது தான் மறைக்கல்வி வளர்ச்சியை, பயிற்சியை, மறுமலர்ச்சியை உலகிற்கு உணர்த்தும் மாபெரும் மறைக்கல்வித் திருநாள். இன்றைய சூழ்நிலையில் விழாக்களுக்கெல்லாம் முதல்விழாவாக அமைய வேண்டிய இம்மறைக்கல்வி விழாவை ஆனித்திங்கள் 6-ம் நாளிலே கிறிஸ்தவ திருமறைக்கல்விச்சபையின் விழாவோடு இணைத்து திரித்துவத் திருநாளிலே கொண்டாடி மகிழ வேண்டுமென இலங்கை ஆயர்சங்கம் அனுமதித்து ஊக்குவிக்கின்றது.

ஆம் இத்தினம் நம் மக்கள் மத்தியிலே, குறிப்பாகப் பெற்றோர் மத்தியிலே ஒரு புத்துணர்ச்சியைப் பிறப்பிக்க வேண்டும். நிமிடத்துக்கு நிமிடம் வளர்ச்சியடைந்துவரும் விஞ்ஞான யுகத்திலே இறை மெய்ஞ்ஞானம் தளர்ச்சியடைந்து போவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன? மக்கள் தங்கள் மறை அறிவைவளர்க்க அதற்கேற்ப வாழப் போதிய ஊக்கமில்லை. பிள்ளைகளின் மறைக்கல்வி, திருமறையில் உங்கள் அப்போஸ்தலப் பணியென்ன என்று கேட்டால் அதைப்பார்க்க ஆயர்களும், குருக்களும் மற்றும் திருமறை ஊழியர்களும் இருக்கிறார்கள் என்று சாட்டிச் சொல்லி, எட்டநின்று, தட்டிக்கழித்து விடுகின்றார்கள்—பெற்றோரும், மற்றவர்களும், தாங்களும் திருவருட்சாதனங்களினூடே, அருட்கொடைகளினூடே திருமறையில் அப்போஸ்தல பணிக்கு, மறைக்கல்வி வளர்ச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற பெரிய உண்மையை மறந்து சீவிக்கின்றார்கள். இந்நிலை மாறவேண்டும். நாங்களும் மறையுடலின் அங்கத்தவர்கள்; உடலின் வளர்ச்சியில் ஈடுபடவேண்டியவர்கள் என்ற பெரிய உண்மை தெளிவாக்கப்பட வேண்டும். 12-ம் பத்திநாத பாப்பிறை பகர்வதை உற்றுநோக்கின் இந்த உண்மை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்குவிளங்கும்.

"கடவுளின் பணிக்காகத் தங்களை அர்ப்பணஞ்செய்த திருத்தொண்டர்கள் மட்டுமல்ல திருச்சபையைத் தாயாகக் கொண்ட அத்தனைபேரும் மறைஉடலின் வளர்ச்சியில் ஈடுபடவேண்டும்" என்கின்றார். "இந்த முயற்சியில் ஈடுபடாத எந்த இல்லறவாசியையும் நான்கண்டிக்கிறேன்" என்கிறார் பாப்பிறை 11-ம் பத்திநாதர். "மறைக்கல்வியை, விசுவாச ஒளியைப் பரப்பும் கடமைப்பாடானது ஒவ்வொரு ஜீவன்மேலும் அவனவன் இயல்பிற்கேற்றவாறு சமத்தப்பட்டுள்ளது" என முழங்குகின்றது 2-ம் வத்திக்கான் சங்க ஏடு.

பாப்பிறைகளின் அறிவுரைகள், ஆயர்களின் நிருபங்கள், சங்கஏடுகளின் போதனைகள் இவைகளெல்லாம் உறங்கிக்கிடக்கும் நம் பெற்றோரின் உள்ளங்களைத் தட்டிஎழுப்ப வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் மறைக்கல்வியைக் கற்பித்து இதன் மகத்துவத்தை உணரச்செய்ய வேண்டும். திருமணம் என்னும் திருவருட்சாதனத்தில் தம் பிள்ளைகளுக்கு உயிர் — உருக்கொடுக்கும்பொறுப்பை மட்டுமல்ல, அறிவூட்டும், விசுவாச ஒளியூட்டும் பொறுப்பையும் பெற்றுள்ளனர்.

"கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில் கிறிஸ்தவ குடும்பம்— இல்லம்" என்னும் இவ்வார்த்தைகள் இதை நமக்கு வலியுறுத்தி நிற்கின்றன. எனவே பெற்றோரும், மற்றோரும் மறைக்கல்வி வளர்ச்சி விஷயத்தில் நமக்குள்ள பாரிய பொறுப்பை உணரவேண்டும். கடந்தேறிய அகில இலங்கைமறைக்கல்வி மகாநாட்டின் ஆய்வுக் குழுக்களின் தீர்மானத் தொகுப்பிலே முக்கியமான தொன்றாகக் கருதி வெளியிடப்பட்ட கருத்து என்னவென்றால், பெற்றோர் மறைக்கல்வியட்டில் அறிவு குன்றியவர்களாக இருப்பதன் காரணமாக மறைக்கல்வி போதிப்பதற்கு ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதே. பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்ற பழமொழிக் கொப்ப, பெற்றோரும், பெரியோரும் தங்கள் மறைஅறிவை வளர்த்தல், விசுவாச ஒளியில் உண்மை வாழ்க்கை, இவைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டும். எல்லா மக்களுடைய மறைக்கல்வி வளர்ச்சிக்கும், விசுவாச வாழ்விற்கும் உதவியாகவன்றோ ஒவ்வொரு பங்கிலும் திருமறைக் கல்விச் சபையை நிறுவுதல் முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது.

ஒவ்வொரு பங்குத் தளங்களிலும் இருந்து படித்த, பயனுள்ள இளவல்களான ஆண் பெண் இருபாலாரும் அவர்களின் விருப்பத்திற் கிணங்க பங்குக் குரவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டு மேற்றிராசனத்தின் குறிக்கப்பட்ட ஒரு சில இடங்களிலே மூன்று மாதங்களாக மறைக்கல்வி விஷயத்தில் விசேஷபயிற்சி அளிக்கப்படுவர். இவர்கள் இலவசமுறையிலே திருமறைக்கல்விப் பக்திச்சபைக்கும், பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் உதவி செய்யக் கூடியவராய் இருப்பர்.

மறைக்கல்வி மறுமலர்ச்சிக்காகப் புதுமுறையில் புகுத்தப்பட்டிருக்கும் இம்மாதிரியான முறைகளையும், பொதுநிலையினரின், பெற்றோரின் முக்கிய பொறுப்புக்களையும் நினைவுபடுத்தி ஊக்குவிப்பது தான் நாம் கொண்டாடும் மறைக்கல்வித் தினத்தின் நோக்கம் என்பதையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இவைகளில் மட்டும் கவனமெடுப்பதால் நாம் சிறந்த முறையில் இம் மாபெரும் விழாவைச் சிறப்பித்து விட முடியுமா? இல்லவே இல்லை. மறைக்கல்வி விழாவின் பூரணத்துவம் நம்முடைய உளமார்ந்த செபத்திலும், சேவையிலும், கொடுக்கும் தியாகத்திலும் தான் அடங்கி இருக்கின்றது. "கேளுங்கள் கொடுக்கப்படும்" என நமது ஆண்டவரே சொல்லியிருக்கின்றார். மறைக்கல்வி வளர்ச்சிக்காக, கிறிஸ்து அரசின் பெருக்கத்திற்காக ஒவ்வொருவரும் உளமாரச்செபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். புனித குழந்தை திரேசம்மாள் தனது இடைவிடா செபத்தின் வல்லமையால் அன்றோ ஆயிரக்கணக்கான மக்களை கிறிஸ்துவின் காலடிக்குக் கொண்டு வந்து மறைக்கல்வி வளர்ச்சியின் பெரிய அப்போஸ்தலியாகத் திகழ்ந்தார்.

அடுத்து இம்மறைக்கல்வித் தினத்தைச் சிறப்பிப்பது சேவை. ஆதிக் கிறிஸ்தவர்களின் அன்புவாழ்க்கை, சேவை வாழ்க்கைதான் திருமறை வளர்ச்சியின் வித்தாக அமைந்தது. இன்றும் உலகின்கண் எத்தனையோ தேவதொண்டர்கள் ஏழைகளையும், அனாதைகளையும், குஷ்டரோகிகளையும், கஷ்டப்படுகிறவர்க

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# வன்முறையைக் கண்டிக்கிறார் பரிசுத்த தந்தை

அண்மையில் வெளிவந்த வத்திக்கான் பத்திரிகைகளில் பரிசுத்த தந்தை வன்முறையைக் கண்டித்துக் கூறியவற்றுக்குப்பிரதான இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இச் சிந்தனை நம் நாடு இன்று இருக்கும் நிலைமையிலே நம் நாட்டுக்கும் இதுமிகப் பொருத்தமாக இருக்கின்றது. நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரத்தைச்செலுத்தி உலகின் பலபாகங்களிலும் வன்முறைகள் கையாளப்படுவதைப் பரி. தந்தை பலமாகக் கண்டித்திருக்கின்றார். இந்த வன்முறை சுவிசேஷ போதகத்துக்கு நேர் எதிரானது என்பதைப் பரி. தந்தை தெளிவாகக் காட்டியிருக்கின்றார். யேசுக்கிறீஸ்துநாதர் வன்முறையை ஒருபோதும் ஆதரித்ததில்லை. "வாளை உறையிலேபோடு; வாளெடுத்தவன் வாளாலே மடிவான்" என்பதே அவர் போதனையும், சாதனையுமாகும். "தற்பாதுகாப்புக்காகப்போர்செய்ய வேண்டியநிலைமையிற் சில தேசங்களிருந்தாலும் நாம் அன்பையும் சமாதானத்தையுமே நாடுகின்றோம்" என்கிறார் பரி. தந்தை.

## கத். ஆசிரியருக்கு பரி. தந்தையின் புத்திமதி

உலக கத். ஆசிரியர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் சென்றமாதம் ரோமாபுரியில் ஒன்றுகூடி இளைஞரையும், அவர்களின் ஆசிரியர்களையும் விரைவாக மாறிவரும் உலகநிலைமைக்குத் தக்கதாக எவ்வாறு ஆயத்தப்படுத்த வேண்டுமென ஆராய்ந்து கொண்டனர். மகாநாடு முடிவுற்றபின் அவர்கள் பரி. தந்தையைப் பேட்டிகண்டு அவருடைய புத்திமதிகளையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டனர். பரி. தந்தை அவர்களது ஊக்கத்தை மெச்சிப் பாராட்டி, ஆசிரியர் சமுதாயத்தில் வகித்துவரும் உன்னதமான இடத்துக்குத் தக்க ஒழுக்கமுடையவர்களாயிருப்பதில் பெரும் பங்கு அவர்களுடைய சித்தி அடங்கி யிருக்கிறதெனக் கூறினார். மேலும் உலகிலுள்ள வெவ்வேறு தேசங்களிலும் வெவ்வேறு விதமான பிரச்சனைகளிருப்பதால் அவ்வத்தேச மேற்றிராணிமார்களுக்கும், கத்தோலிக்க ஆசிரியர்களுக்கும் நெருங்கிய தொடர்பும், ஒத்துழைப்பும் அவசியமென்பதையும் பரிசுத்த தந்தை வற்புறுத்தினார். தேசிய கத்தோலிக்க சங்கங்கள் சர்வதேச சம்மேளன ரீதியில் இயங்கிவருவதுபற்றி பரிசுத்த தந்தை தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துத் தமது ஆசீர்வாதத்தையும் அருளலாயினார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

# செய்திகள்

## குடிசன மதிப்பு

எதிர்வரும் ஆடி மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடு முழுவதிலும் குடிசன மதிப்பு எடுக்கும் நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனால் அரசாங்க சேவையிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு அன்று தினம் போயா முதலநாள்போன்று அரைஓய்வுநாளாக இருக்கும்.

## செய்திகள் தணிக்கை

பயங்கரவாதிகளின் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ளநிலை சம்பந்தமான செய்திகள், கட்டுரைகள், ஆசிரியதலையங்கங்கள் ஆகியவைகளைத்தேசிய பாதுகாபபை முன்னிட்டுத் தம்மிடம்காட்டி அனுமதி பெற்றபின்னரே பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டுமென்று தணிக்கை அதிகாரி உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்.

## பிக்கு உடையில் கைது

கொழும்பு யோக்விதியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையிலிருந்து 57,000ரூபா பணத்துடன் தப்பியோடித் தலைமறைவானவரெனக் கருதப்படும் வங்கிக் கஷியரைச் சிலாபப் பொலிசார் கைது செய்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் கைது செய்யப்பட்டபோது அங்குள்ள புத்தவிகாரை ஒன்றிலே பிக்கு உடையுடன் காணப்பட்டாராம்.

## தனியார் லொறிகள்

கடந்த சிலவாரங்களில் அரசாங்க அதிபர்கள் தனியாருக்குச் சொந்தமான பெருந்தொகை லொறிகளை பொறுப்பேற்றுள்ளார்கள். உணவுப் பொருள்களையும், மற்றும் அத்தியாவசிய பொருள்களையும நாடெங்கும் துரிதமாகக் கொண்டுபோய் வழங்குவதற்கே அவைகள் பொறுப்பேற்கப் பட்டுள்ளனவாம். கொழும்பு அரசாங்க அதிபர் மட்டும் அறுநூறு லொறிகளுக்குமேல் பொறுப்பேற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

## இரத்தப் புற்றுநோய்

"லூகேமியா" எனப்படும் இரத்தப்புற்று நோயைக் குணப்படுத்தக்கூடிய மூலிகை "பட்டிப்பூ"எனும் பூக்களில் இருப்பதாக அரசாங்க பாமசிஸ்ற் சங்கத்தினர் சஞ்சிகை எழுதியிருக்கிறது. இலங்கைக் காடுகளில் அடர்ந்து காணப்படும் இந்தப்பூ சிங்களத்தில் "மினிமல்" என்றும், விஞ்ஞானத்துறையில், "லொக்னோரா ரோசா"என்றும் அழைக்கப்படுகிறது.

## தேரோவின் கண்தானம்

கொட்டாஞ் சேனையிலே சிலதினங்களின்முன் காலஞ்சென்ற கனம் பனனசித்தி மகாதேரோ மரிக்குமுன் தனது கண்களைக் கண்தான சபைக்குத் தானஞ்செய்திருந்தார். கொழும்பு அரசினர் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அவருடைய கண்கள் இருவருக்குப் பார்வையளிக்க இருக்கின்றன.

## பஸ் விபத்துகள்

1967ஆம் ஆண்டு முதல் இதுவரை நாட்டிலே பஸ் விபத்துகள் 25சதவிகிதம் குறைந்திருப்பதாக போக்குவரத்துச் சபைத் தலைவர் தெரிவித்து, இது சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் நன்றி தெரிவித்திருக்கின்றார்.

## பரீட்சைகள் இல்லை

நாட்டிலே நிலைமைசீரடைந்து பாடசாலைகள் திறக்கப்படும்வரை கல்விப் பொதுத்தராதரப்பத்திரத்திற்கான விஞ்ஞான செய்முறைப் பரீட்சைகளையும், கலைப்பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சைகளையும் நடத்துவதில்லையென அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

## றெயில்வே சலார் உயரும்

இலங்கை றெயில்வேக்கு வருடம் ஒன்றுக்குச் சராசரியாக ஏழுகோடிரூபா நட்டம் ஏற்படுகிறது. பலவருடகாலமாக நட்டத்தில் இயங்கி வரும் றெயில்வே சேவையை ஆதாயம் தரக்கூடிய சேவையாக நடத்தப்படவிருக்கிறது. அதனால் றெயில்வே பிரயாண சலாரையும், அதன்மூலம் சாமான்கள் ஏற்றியிறக்கும் சலாரையும் விரைவிலே உயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

## ஆயுள்வேத வைத்தியர்கள்

பதிவு செய்து கொண்ட ஆயுள்வேத வைத்தியர்களுக்கும் இப்போது அடையாளக்காட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயுள்வேத வைத்தியசபையிடம ஒரு ரூபா கட்டி இந்த அடையாளக் காட்டுகளை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## ஆசிரியர் இடமாற்றமில்லை

அவசர காலநிலை காரணமாகப் பின்போடப்பட்டிருந்த ஆசிரியர் இடமாற்றம் எதுவும் இவ்வாண்டில் நடைபெற மாட்டாதென்றும், அடுத்த தைமாதத்துக்குப் பின்னரே இந்த இடமாற்றங்கள் நடைபெறுமென்றும் கல்வி மந்திரி அறிவித்திருக்கின்றார். முன்னர் இந்த இடமாற்றம் இந்த வைகாசிமாதம் 1ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டிருந்தது.

## தமிழில் நிர்வாகம்

யாழ்ப்பாண மாநகரசபையின் பொதுநிர்வாகத்தைத் தமிழில் நடத்துவதென்றும், சிங்களத்தில் எழுதப்படும் கடிதங்களுக்குச் சிங்களத்தில் பதில் அனுப்புவதென்றும், மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும்போது சிங்களமொழி பெயர்ப்பையும் சேர்த்து அனுப்புவதென்றும், அதேபோல் மத்திய அரசாங்கம் சிங்களத்தில் கடிதங்களை அனுப்பும்பொழுது தமிழ் மொழி பெயர்ப்பையும் இணைக்கவேண்டுமெனக் கேட்பதென்றும் யாழ்ப்பாண மாநகரசபை தீர்மானித்திருக்கிறது.

## காரணம் கூறுகின்றார்

"ஆத்மீக மதிப்புகளில்லாத சூழ்நிலையில் இளைஞர் சமுதாயம் அண்மைக் காலத்தில் வளர்க்கப்பட்டமையே தற்போதைய அர்த்தமற்ற பலாத்காரச் செயல்களுக்கு உண்மையான காரணம்; எவர் எதைக் கூறினாலும், இதுவே இந்த நீதியற்ற— அர்த்தமற்ற பலாத்காரச் செயல்களுக்குக் காரணமென்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டக்டர் எம். சி. எம். கலீல் கூறியிருக்கிறார்.

## விஷவைத்திய பாடம்

பாம்புக்கடி விஷவைத்தியம் அழியாமல் நிலைபெறவேண்டுமானால் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் விஷவைத்தியம் ஒரு கட்டாயபாடமாகப் போதிக்கப்படவேண்டும்; அவற்றிலே விஷவைத்தியர்கள் அதைப் போதிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென்று மாத்தறையிலுள்ள பிரபல விஷவைத்தியர் திரு. ஈ. டி. ஜேம்ஸ் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

## வாழ்க்கைச் செலவுப்புள்ளி

சென்ற சித்திரை மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுப்புள்ளி 139 9 ஆகும். இது முந்திய மாதத்திலும் 6புள்ளிகளால் அதிகரித்துள்ளது. மீன், தேங்காய், உருளைக்கிழங்கு முதலிய சில உணவுப்பொருள்களின் விலை அதிகரித்தமையே அது இவ்விதம் அதிகரிக்கக் காரணமாகும்.

## மாணவருக்கு வேண்டுகோள்

மாணவர்கள் – விசேடமாக உயர்வகுப்பு மாணவர்கள் வீட்டிலிருந்து தங்கள் பாடங்களை மீட்டல்பயிற்சி செய்ய வேண்டுமென்று ஆசிரியர்கள் மூலமாகக் கல்விமந்திரி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

* * *

● புது டில்லியிலுள்ள ஈர்வின் ஆஸ்பத்திரியின் காதுவைத்திய நிபுணரான பேராசிரியர் குமார் கக்கர் அவர்கள் 23வயதான ஹரர் பன்ஸ்லால் எனும் செவிடரின் காதிலே அறுவைச் சிகிச்சைநடத்தி அவருடைய காதுச் சவ்வுக்குப்பதில் இறந்த ஒருவரின் காதுச் சவ்வைப் பொருத்தி வெற்றி கண்டிருக்கிறார். இப்போது அவருக்கு நன்றாகக் காது கேட்கின்றதாம்.

● தென்கிழக்கு ஆசியாவிலேயே அதிகம் உயரமான 65 மாடிக் கட்டடம் ஒன்று சென்னை நகரிலே கட்டியெழுப்பப்படவிருக்கிறது. இதன் உயரம் 820 அடியாகும். மொத்தமாக இதற்கு ஏற்படுஞ் செலவு 14கோடி ரூபாவாகும். தமிழ்நாடு அரசாங்கமே இதைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டுள்ளது.

● ஓடியாடி நன்குவிளையாடினால் இருதயநோய் வராதென்று ஜேர்மனிய விளையாட்டுக்கழகம் பிரசாரஞ் செய்து வருகிறது. இதற்கென மனிதவுடலின் உறுப்புக்களைப் பரிசோதனை செய்யும் சாதனங்கள் அமைந்த பஸ்ஒன்று ஊரூராகச்சென்று "இருதயநோய் வராதிருக்க விளையாட்டுகளில் ஈடுபடுங்கள்" என்று பிரசாரஞ் செய்கின்றது.

● எதிரிகளின் ஏவுகணைகள் யாதும் அமெரிக்காவைத் தாக்க முன்வந்தால் அவைகளை முன்னதாகவே கண்டறிந்து செய்திகொடுக்கத் தக்கதாய்ச் சமீபத்திலே தான் கண்டுபிடித்துள்ள செயற்கைக் கோள் ஒன்றை அமெரிக்கா சென்ற 5ஆம் திகதியன்று விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

● பிரித்தானிய அரசாங்கத்திடம் தற்போதுள்ள தங்கம், டலர் ஆகியவற்றின் கையிருப்பு 142 கோடியே 50லட்சம் பவுண் பெறுமதியுடையது. இற்றைக்கு 26 வருடங்களின்முன் இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததிலிருந்து இதுவரை இல்லாத விதமாய் இந்தக் கையிருப்பு சமீபத்தில் அதிகரித்திருக்கிறது.

● மேமாதம் 18ஆம் திகதியன்று அமெரிக்கா செவ்வாய்க்கிரகத்துக்கு மற்றோர் மறினர் செய்மதியை அனுப்பவிருக்கிறது. சென்ற 9ஆம் திகதி அனுப்பிய முதலாவது மறினர்செய்மதி விழுந்தகாரணத்தைப் பரிசிலனை செய்த விஞ்ஞானிகள் அதிலுள்ள தானுகவியக்கும் கருவியில் ஏற்பட்ட கோளாறேயெனக் கண்டறிந்துள்ளார்கள்.

● இருதயமாற்ற சத்திர சிகிச்சையின் முன்னோடியான பேராசிரியர் கிறிஸ்ரியன் பேர்னட் சென்ற 11ஆம் திகதி கேப்ரவுண் நகரிலே ஆறுவது சத்திர சிகிச்சையை நடத்தியுள்ளார். சிகிச்சைபெற்றவரின் உடல் நன்றாயிருக்கிறதாம். உலகில் இதுவரை நடைபெற்றுள்ள 159ஆவது இருதயமாற்ற சிகிச்சை இதுவாகும்.

● அமெரிக்கா சென்ற 9ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அனுப்பிய முதலாவது "மறினர் 8செய்மதி புறப்பட்ட இடத்திலிருந்து 900மைல் சென்றதும் கட்டுக்கடங்காது அத்திலாந்திக் சமுத்திரத்தில் வீழ்ந்தது. இதனை தாங்கிச்சென்ற "றொக்கெற்"றில் ஏற்பட்ட மின்தவறே இதற்குக் காரணமாம்.

● முதலாவது அமெரிக்க மறினர் செய்மதி செவ்வாய்க் கிரகத்தை அடைவதற்கு ஆறுமாதகாலம் விண்வெளியில் பிரயாணஞ் செய்யவிருந்தது. இது தனது இலக்கை அடையாது விழுந்தமையால் 6கோடியே 40லட்சம் டலர் வீணாயிற்றென்று சொல்லப்படுகிறது.

## மாபெரும்.......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளையும் வைத்துப் பராமரித்துக் காப்பாற்றும் சேவையிலே மறைக்கல்வியை மௌனத்தில் போதிக்கின்றார்களன்றோ. இப்படி நாம் செய்யாவிட்டால் நமது குடும்பங்களிலே, நமது சுற்றுடலிலே, நமது சிறு சேவைகளினூலே, நாம் காட்டும் நல்ல மனதினூலே சிறந்தமுறையில் மறைக்கல்வி வளர்ச்சியில் ஈடுபடலாமன்றோ.

சுவர் இருந்தாற்றான் சித்திரம் வரையமுடியும். பணமென்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். இலங்கை மறைஆயர்களின் தேசிய சங்கத்தீர்மானத்தின்படி ஒரு மறைவட்டத்தில் (மேற்றிராசனத்தில்) மறைக்கல்வி வளர்ச்சிக்காக முழுமையாக ஈடுபடும் மறைக்கல்வி நடுநிலையம், கருத்தரங்குகள், திரைப்படக்காட்சிகள் நடாத்த நூல்நிலயத்திற்கான புத்தகங்கள், மற்றும் உபகரணங்கள்வாங்க மறைக்கல்வி சம்பந்தமான வெளியீடுகள், புத்தகங்களை வெளியிட்டுப்பரப்ப இன்னும் இன்னோரன்ன தேவைகளுக்கும்பாரிடமிருந்து பணத்தை எதிர்பார்க்கிறது. திருமறை அங்கத்தவர்களின் தாராள மனதுள்ள தியாகத்தில் இருக்குதான் என்பது உண்மை. ஆம், இந்த மறைக்கல்வித் தினத்திலே தங்களின் தியாகத்தை மறைக்கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பது இவ்விழாவின் சிறப்பன்றோ.

எனவே மாபெரும் மறைக்கல்விவிழாவைக் கொண்டாடி மகிழும் நாம் நிறைந்த செபத்தினூலே, பணிந்த சேவையினூலே, தாராளமான தியாகத்தினூலே மறைக்கல்வி வளர்ச்சியில் ஈடுபடுவதோடு, மறைக்கல்வி சம்பந்தமான கலைநிகழ்ச்சிகளை, நாடகங்களை, சொற்பொழிவுகளை அந்தந்த இடங்களிலே நிகழ்த்தி மறைக்கல்வியின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்துவோம்.

எவ்வுலகும் காத்தருளும்
ஈசனென நீ இருந்தும்
எல்லாம் துறந்த ஓர்
ஏழையென வந்தாயோ?
ஏழையென வந்துனது
இருகரத்தை நீட்டியு மிக்
கோழை மனந் திறந்து
கொடுத்திடுவோர் எத்
தனைபேர்?

(அ. மருசலீன்)

---

✠

**திரு. வே. ற. தம்பிராசா**
அவர்களின்

## ஓர் ஆண்டு மரண நினைவு
**17-5-71**

"உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."

நீர் மறைந்து ஓர் ஆண்டு மறைந்திடினும் சிந்தையில் சிலநிமிடம் மறைந்திரில்லை. உங்கள் பிரிவின் வேதனைதான் திருமுன்னே! எம் தாயையும் தம்பி தவத்தையும் தானழைத்த மர்மமென்ன?

தங்கள் பிரிவால் துயருறும்:
அருமை மக்கள், பேரர்,
மருமக்கள்.

ஜம்பு லொட்ஜ்,
மானிப்பாய்.

# "ஆண்டவரே நீர் யார்?"

தமாஸ்குஸ் நகரிலுள்ள கிறிஸ்தவர்களைக் கட்டியிழுத்து ஜெருசலேமுக்குக் கொண்டுவருவான் புரவி ஒன்றின் மேல் வீரர்கள் பின்தொடர விரைந்து செல்கின்றார் சவுல். அவர் மதியவேளை அந்நகரை அண்மியபோது, திடீரென விண்ணிலிருந்து மின்னல்போலும் அதிசய பிரகாசம் ஒன்று வீழ்ந்து அவர்கள் கண்களை மயக்கவே, மின்னலடி பட்டவர்போல நிலைதளர்ந்து நிலத்தில் விழுகின்றார். அப்பொழுது நிகழ்ந்ததை அவரே சொல்லுகின்றார். "சவுலே, சவுலே ஏன் என்னை உபாதிக்கிறாயென்று எனக்குச் சொல்லுகிற ஒரு குரலொலியைக் கேட்டு, 'ஆண்டவரே, நீர்யார்' என்றேன், அதற்கு அவர் 'நீ துன்பப்படுத்துகின்ற நசரேயனாகிய யேசுநாதனே' என்று பதில் கிடைத்தது."

சுவிசேஷ நற்செய்தியில் சவுலைப்பற்றிய வரலாறு முதல் வேதசாட்சியான முடியப்பர் வேதசாட்சியானதிலிருந்து ஆரம்பமாகிறது. வேதவிரோதிகள் முடியப்பர்மேல் பாய்ந்து



பட்டணத்துக்குப் புறம்பே தள்ளிக்கொண்டுபோய் அவரைக் கல்லால் எறிகின்றார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றிச் சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனின் பாதத்தினருகே வைக்கின்றார்கள். சவுலும் அவருடைய கொலைக்கு உடந்தையாயிருந்து அதற்கு உடன்பங்காளியாகின்றார்.

ஜெருசலேம் நகரில் திருச்சபைக்கு விரோதமாகப் பெருங்கலகம். சவுல் வீடுகள் தோறும் புகுந்து கிறிஸ்த ஸ்திரிபுமான்களை இழுத்துப்போய்ச் சிறைச்சாலையில் போடுவித்துத் திருச்சபையைப் பாழாக்குகின்றார். ஆண்டவரின் சீஷர்களைப் பயமுறுத்திக் கொலை செய்ய வேண்டுமென்ற பேராவேசம் கொண்டவராய்ப் பெரிய குருவிடம் செல்கின்றார். கிறிஸ்தவர்களான ஸ்திரிபுமான்கள் எவரைக் கண்டாலும் அவர்களைக் கட்டியிழுத்து ஜெருசலேமுக்குக் கொண்டுவர அதிகாரம் பெற்றுத் தமாஸ்குஸ் நகருக்குத் தாமதமின்றியே பிரயாணப்பட்டுப்போய் அதனைச் சமீபித்தபோது...

"திடீரென வானத்திலிருந்து ஒரொளி அவரைச் சூழ்ந்து பிரகாசிக்கவே, அவர் தரையில் விழுந்து; 'சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்' யென்று தன்னை நோக்கிச் சொல்லுகிற சப்தத்தைக் கேட்டார். அப்பொழுது அவர், 'ஆண்டவரே, நீர் யார்?' என்று கேட்க, அவர்: 'நீ உபத்திரவப்படுத்துகிற யேசுநாதர் நாமே' என்றார். இதைக் கேட்டு அவர் நடுநடுங்கிப் பயந்து, 'ஆண்டவரே, நான் என்ன செய்யும்படி சித்தமாயிருக்கிறீர்?' என்றார். ஆண்டவர் அவருக்கு மாறுத்தரமாக; 'நீ எழுந்து பட்டணத்துக்குப்போ; நீ செய்யவேண்டியது இன்னதென்று அங்கே உனக்குச் சொல்லப்படும்' என்றார்.

அப்பொழுது சவுல் தரையினின்று எழுந்து, கண்களைத் திறந்தும் ஒன்றும் காணாதிருந்தார். ஆகையால், அவரோடு சென்றவர்கள் அவர் கையைப் பிடித்துத் தமாஸ்குஸ் பட்டணத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கே அவர் மூன்று நாளளவாகக் கண்தெரியாதவராய்ச் சாப்பிடாமலும், குடியாமலும் இருந்தார்.

"அப்பொழுது தமாஸ்குஸ் பட்டணத்தில் அனனியா என்னும் பேருள்ள ஒருசீஷன் இருந்தார். ஆண்டவர் ஒரு தரிசனத்தில் அவரை நோக்கி: அனனியாவே என்க, அவர், 'ஆண்டவரே, இதோ அடியேன்' என்றார். அப்பொழுது ஆண்டவர் அவரை நோக்கி: 'நீ எழுந்து நேர்வீதி என்னும் தெருவுக்குப்போய், தார்சு நகரத்தானாகிய சவுல் என்பவனை விசாரி; ஏனெனில், இதோ அவன் செபம் செய்கிறான்' என்றார்.

அப்பொழுது சவுல், அனனியா என்னும் ஒரு மனிதன் உள்ளே பிரவேசிக்கிறதையும், தான்பார்வை அடையும் பொருட்டுத் தன்மேல் கரங்களை நீட்டி வைக்கிறதையும் தரிசிக்கின்றார் — அனனியா பதில்மொழியாக, 'ஆண்டவரே இந்த மனிதன் ஜெருசலேமில் உம்முடைய அர்ச்சியசிட்டர்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்; இங்கேயும் உமது நாமத்தைத் தொழுகிற சகலரையும் பிடித்துக்கட்டும்படி பிரதான ஆசாரியர்களிடத்தில் இவன் அதிகாரம் பெற்றிருக்கிறானே' என்றார்.

அதற்கு ஆண்டவர்: 'நீ போ; ஏனெனில இவன் புறசாதியாருக்கும், இராசாக்களுக்கும், இஸ்ராயேல் புத்திரருக்கும் முன்பாக நம்முடைய நாமத்தைக் கொண்டுபோக நாம் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்' என்றார். ஆகையால், அனனியாபோய் அந்த வீட்டில் பிரவேசித்து: 'சவுல் சகோதரரே, நீர் வந்த வழியில் உமக்குத் தரிசனையான ஆண்டவராகிய யேசுநாதர் நீர் பார்வையடையவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படவும் என்னை அனுப்பினார்' என்றார். உடனே அவருடைய கண்களிலிருந்து செதில் கள்போன்றவைகள் விழவே, அவர் பார்வையடைந்து எழுந்து ஞானஸ்நானம் பெற்றார். அப்பொழுதே சவுல் பவுலானார்; அதாவது சின்னப்பரானார். அவர் அந்நகரிலேயே சிலநாள் தங்கியிருக்கையில், "யேசுநாதரே சர்வேசுரனுடைய சுதன்" என்று செப ஆலயங்களில் பிரசங்கிக்கத் தொடங்கினர். அவர் பிரசங்கத்தைக் கேட்ட அனைவரும் பிரமித்து, இந்த நாமத்தைத் தொழுகிறவர்களை ஜெருசலேமில் உபத்திரவப் படுத்தினவன் இவனல்லோ; இங்கும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடம் இழுத்துக்கொண்டு போகும்படி வந்தவனல்லோ! என்று பேசிக்கொண்டார்கள்.

சின்னப்பர் சிசிலியாநாட்டிலே, தார்சுஸ்நகரில், யூதகுலத்தில் பிறந்தவர். அற்புதமாக மனந்திரும்பி அப்போஸ்தலராக மாறியவர். "சர்வேசுரனுடைய சுவிசேஷத்தைப் போதிக்கும்படி பிரித்தெடுக்கப்பட்டவன்" என்று அவர் தமது நிருபங்களுள் ஒன்றில் தம்மைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது என்க.

சுபம்.

## மரியாளின் மாதமிதே!

சிங்கார வனந்தனிலே
சாத்தானின் சிரம்மிதிக்க
சிருட்டிகர் செய்தி சொன்ன
மரியாளின் மாதமிதே.

மாற்றானின் சதியினாலே
மானிலத்தோர் மாசுபெற்றும்
மாசின்றி அவதரித்த
மரியாளின் மாதமிதே.

மன்னுயிர் மாசகற்றும்
மாபரன் யேசுதன்னை
மண்ணுலகு கொண்டுவந்த
மரியாளின் மாதமிதே.

தூயாவி துணைகொண்டு
தூய்மையிற் களங்கமின்றி
தூயோனை ஈன்றுவந்த
தூயவளின் மாதமிதே.

சிந்தைக்கினிய செல்வத்தைச்
சிலுவையில் பலிகொடுத்து
மானிடரை மீட்டெடுத்த
மரியாளின் மாதமிதே.

"செபமாலை"ப் பக்திதனை
சிறுவர் மூவரிடம்
உலகிற் குவந்தளித்த
உத்தமியின் மாதமிதே.

செகத்திலுள்ள மாந்தர்கள்
செம்மை வாழ்வுபெற
வரங்கள் வேண்டிநிற்கும்
மரியாளின் மாதமிதே.

எஸ்: சிறில்
கட்டைக்காடு.

## ஆண்டவனின் அற்புத சக்தி அன்றும்....இன்றும்

(எஸ். எவ். சவுந்தரம், மறை ஆசிரியர்)

பன்னிரண்டு ஆண்டுகளாய் பெரும்பாடு என்ற தீராதவியாதியினால் பீடிக்கப்பட்ட பெண்ணொருத்தி தன்னுடைய பொருட் செல்வம் எல்லாவற்றையும் வைத்தியர் பலருக்கும் செலவழித்தும் குணம் காணாதிருந்தாள். மாறாக இன்னும் அதிக துன்பத்திற்குள்ளானாள். இந்த நேரத்தில் இறைமகன் யேசுவைப் பற்றியும், அவரிடம் இருந்து புறப்படும் அற்புத சக்தியால் குணமடையும் பலவித வியாதிக்காரர்களின் மனமகிழ்ச்சியைப்பற்றியும் கேள்விப்பட்டாள்.

என்ன சந்தோஷம். தானும் அந்த தெய்வ மனிதனைப் பார்க்க வேண்டும், அவருடைய ஆடையையாவது தொட்டு அவரது அற்புத சக்தியில் பங்குபெற வேண்டும்; அதனால் நல்ல சுகமடைய வேண்டுமென்று விரும்பினாள்.

நேரம்வந்தது. யேசு மக்கட் திரள் புடைசூழ செபக்கூடத் தலைவன் யாயீர் வீடுநோக்கி நடைபோடுகின்றார்; யாரும் அறியாது கூட்டத்தில் நுழைகின்றாள். உண்மையான விசுவாசத்துடன் சுகமடைவேன் என்ற உறுதியான நம்பிக்கையுடன் ஆண்டவனின் ஆடையின் விளிம்பைத் தொடுகின்றாள். என்ன ஆச்சரியம் ஒரு கணப்பொழுதில் அற்புதசக்தியால் பூரண சுகம் பெறுகின்றாள். அவளது நிறைந்த மனமகிழ்ச்சியை "யாரென் ஆடையைத் தொட்டது" என்னும் யேசுவின் வார்த்தைகள் நிலைகுலையச் செய்துவிடுகின்றது. அப்போஸ்தலர்களோ முட்டிமோதிவிழும் மக்கள் மத்தியிலே யாரென்னைத் தொட்டது என்கின்றீரே என்னும் விளங்கா வினாவைத் தொடுக்கின்றனர். இறைமகனோ தன்னிடம் இருந்து புறப்பட்ட இறை சக்தியை உணர்ந்தவராய் கூட்டம் முழுவதிலும் கண்ணோட்டம் இடுகின்றார் பயனடைந்த பாவையைக் காணும் பொருட்டு. குணமடைந்த அவளோ கூடிநின்றவர் வியக்க, அஞ்சி, நடுங்கி ஆண்டவனின் பாதத்தில் விழுந்து உண்மையை உரைக்கின்றாள். "மகளே உன் விசுவாசம் உன்னை குணமாக்கிற்று. சமாதானமாய்ப் போ; நோய் நீங்கி நலமாயிரு" என்னும் யேசுவின் வார்த்தைகளை மீண்டும் அவள் கேட்கும் பொழுது குலைந்தமன மகிழ்ச்சியை மீண்டும் பெற்றவளாய் அமைதியோடு விடை பெறுகின்றாள்.

இச் சம்பவத்தை — இன்னும் இதுபோன்ற ஆண்டவனின் சரிதையில் அன்றைய மக்கள் பயனடைந்த மற்றும் சம்பவங்களை நற்செய்தி ஏடுகளிலே, மறை உரைகளிலே, மறை வகுப்புகளிலே, வார்த்தைவழி பாடுகளிலே கண்டும் கேட்டும் படித்தும் வருகின்ற இன்றைய சமுதாயம் ஒருவேளை நினைக்கக்கூடும், தெய்வ மனிதனைத் தொட அவரின் அற்புத சக்தியை அனுபவிக்க அக்கறை அற்றவர்களென்றே நாம் என்று.

இல்லை. ஒருநாளும் இல்லை. ஆண்டவனின் அன்பை இழந்த அலகையினால் அனுப்பப்பட்டு அறிவிழந்து, அருள் இழந்து, உடலிலும் உள்ளத்திலும் நலிவடைந்த ஆதிமனிதனையும்—தொடர்ந்த மனித சந்ததியையும் மீண்டும் பலப்படுத்தி இறை இடம் நடத்திச் செல்ல ஓர் அற்புத சக்தி தேவைப்பட்டது. ஆம் அந்த அற்புத சக்திதான் இறைமகனிடம் இருந்து புறப்பட்டு அன்றைய மக்களிடம் செயல்பட்டது.

அதே தெய்வீக சக்தி இன்றும் உலகில் செயல்புரிந்து வருகின்றது. இறை மகனைக் கையால் அன்று கருத்தால், உள்ளத்தால், எண்ணத்தால், அதனிடம் இருந்து புறப்படும் நற்செயலால் தொடுபவர்களின் ஆன்மாவிற்குள் இன்றும் அச்சக்தி பாய்ந்த வண்ணமாகவே இருக்கின்றது. உண்மையான விசுவாசத்துடனும், திருமகன் யேசு நம்மை மீட்கவந்த இறைமகன் என்ற அசையாத நம்பிக்கையுடனும் அவரை ஏற்றுக் கொள்ளும்போது ஆம் நாம் யேசுவைத் தொடுகின்றோம். அழியும் உடலினால் அல்ல அழியா ஆன்மாவினால்.

அவர் ஏற்படுத்திய அருட்சாதனங்களை தகுந்த ஆயத்தத்துடன், நிறைந்த பக்தியுடன் பெற்றுக்கொள்ளும் போது யேசுவின் அற்புத சக்தி நமக்குத் தாராளமாகக் கிடைக்கின்றது. நாமும் யேசுவைத் தொடுகின்றோம்.

யேசுவின் பகிரங்க வாழ்விலே கண்ணிழந்தவர்களை, முடவர்களை, தொழுநோயாளிகளை, இறந்தவர்களைத் தொட்டு, தூக்கிவிட்ட பொழுதன்றோ அவரின் அற்புதசக்தியால் குணம் கண்டார்கள். இன்றும் அருட்சாதனங்களில் இப்படியான திருநிகழ்ச்சிகளை நடத்தும் பொழுது மனித அறிவிற்கு எட்டாத முறையிலே ஆண்டவனின் சக்தி ஆன்மாவிற்குள் பாய்கின்றதன்றோ.

ஆண்டவனின் அற்புத சக்தியால் நேரடியாகப் பயனடைந்த அன்றைய மக்களின் சம்பவங்களை, நிகழ்ச்சிகளை, இடங்களை, கண்டும், கேட்டும் படிக்கும் நாம் இன்றும் நாம் பெறும் அதே தெய்வீக சக்தியை உணராதிருந்தால்—உணர்ந்தும் வாழாதிருந்தால் நம்முடைய வாழ்க்கை பொருளற்ற பயனற்ற வாழ்க்கை.

### நன்றித் துதிகள்

பரிசுத்த சதாசகாயமாதாவே எனது தாயின் வருத்தம் நீக்கி பூரண நலமருளினீர். தாயே உமக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

நெடுந்தீவு. உமது அடியாள்

* * *

கைவிடப்பட்டவர்களின் நம்பிக்கையான அர்ச். யூதாததேயுவின் வேண்டுதலால் என் தாயின் நோய் தீர்ந்து குணமானது. இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

நெடுந்தீவு. ஓர் அடியாள்,

## பூசை வழிகாட்டி

**வைகாசி — 1971.**

23. ஞாயிறு — பாஸ்காவின் 7ஆம் ஞாயிறு [வெ]
1ஆம் வாசகம்: அப். பணி. 7 : 55—60
2ஆம் வாசகம் : திருவெளி. 22 : 12—14, 16—17, 20
சுவிசேஷம் : அரு. 17 : 20—26

24. திங்கள் — நாள் பூசை [வெ]
வாசகம்: அப். பணி 19 : 1—8
சுவிசேஷம்: அரு. 16 : 29—33

25. செவ்வாய் — நாள் பூசை [வெ]
(அ) புனித 7-ம் கிரகோரியார்
வாசகம் : அப். பணி 20 : 17—27
சுவிசேஷம் : அரு. 17 : 1—11

26. புதன் — புனித பிலிப்புநேரியார் [வெ]
வாசகம்: அப். பணி 20 : 28—38
சுவிசேஷம் : அரு. 17 : 11—19

27. வியாழன் — நாள் பூசை [வெ]
(அ) புனித பேதா
வாசகம்: அப். பணி 22: 30, 23: 6—11
சுவிசேஷம் : அரு. 17 : 20—26

28. வெள்ளி — நாள் பூசை [வெ]
(அ) புனித கான்டர்பரி அகுஸ்தீனர்
வாசகம் : அப். பணி 25 : 13—21
சுவிசேஷம் : அரு. 21 : 15—19

29. சனி — நாள் பூசை [வெ]
(அ) புனித பாஸி மரியமதலே.
வாசகம் : அப். பணி 28: 16—20, 30—31
சுவிசேஷம் : அரு. 21 ; 20—25.

*சத்தியவேத பாதுகாவலன்*

# உலக தொடர்பு சாதனங்கள் தினம்

ஆறும் சின்னப்ப பாப்பரசரால் ஆரம்பிக்கப்பட்ட சமூகத் தொடர்பு சாதனங்கள் தினம் கடந்த ஐந்து ஆண்டுகளாக கத்தோலிக்க மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இது பெயரளவுக்குக் கொண்டாடப்படும் ஒரு தினம் அல்ல. இரண்டாவது வத்திக்கான் சங்கம் திருச்சபையைப் புதுப்பிக்க வகுத்த திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

நாகரிக முன்னேற்றத்தின் விளைவாக மனிதனின் கருத்துக்களைப் பரப்பும் கருவிகளான அச்சியந்திரம் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி முதலியன பெரிதும் அபிவிருத்தி அடைந்துள்ளன. ஆகவே ,இச்சாதனங்கள் மக்கள் வாழ்வில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. அறிவைப் பரப்பவும், கலையை வளர்க்கவும் இன்று இச்சாதனங்கள் இன்றியமையாதனவாய் விட்டன. அதே சமயத்தில் தீயசக்திகள் அவற்றைத் துர்ப்பிரயோகம் செய்வதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே தான் இக்கருவிகளை உபயோகிப்போருக்காக, அவற்றோடு தொடர்புடைய தொழில்களை மேற்கொண்டோருக்காக செபம் செய்வதற்காக ஒரு தினம் ஒதுக்கப்பட்டது. இது அத்தகையோரின் பொறுப்புக்களை உணர்த்தவும் அவர்களின் மனச்சாட்சியை உருவாக்கவும் உதவுமென்று திருச்சபை கருதுகிறது. முக்கியமாக கத்தோலிக்கசமூகம் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கும், மக்கள் குலத்தின் நலனைக் கருதியும், இச்சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இத்தினம் நினைவூட்டுகிறது.

இத்தினத்தின் பொதுக்கருத்துக்கள் இவையாயினும் ஒவ்வொரு வருடமும் தொடர்பு சாதனங்கள் பற்றிய சில விசேஷ அம்சங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வருடத்திய கருத்து யாதெனில் உலக மக்களிடையே சமாதானத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு அச்சுச்சாதனங்கள், வானொலி, திரைப்படம் முதலியன எங்ஙனம் உதவலாம் என்பதைக் குறித்ததாகும். இன்று இக்கருத்தைக் குறித்து ஆராய்வது மிகப்பொருத்தமானதாகும். ஏனெனில், பிரிவினைகளாலும், சண்டை சச்சரவுகளாலும் உலகம் எவ்வளவு சீர்குலைந்து வருகின்றதென்பதை அறிவோம். அதிகாரம், பணம் முதலியவற்றின்மீது கொண்ட ஆசை மனிதரை மிருகங்களாக்கிக் கொண்டிருக்கிறது. மனிதத்தன்மையை மீண்டும் அவர்கள் உள்ளங்களில் தளிர்க்கச் செய்து சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நிலவச் செய்யாவிடில் உலகம் அழிவுப் பாதையிலேதான் சென்று கொண்டிருக்கும்.

இந்நிலையிலே தொடர்பு கருவிகள் சமாதானத்தை வளர்ப்பதற்கு எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன? மக்களிடையே மூண்டுவரும் பகையையும் போராட்டங்களையும் தணிப்பதற்கா அல்லது தூண்டுவதற்கா அவை பயன்பட்டு வருகின்றன? தொடர்பு கருவிகளைப் பிரயோகிப்போர் சமாதானப் பணியில் இறங்கினால் அவர்கள் செய்யக்கூடிய நன்மைக்கு எல்லையில்லை. எனவே தமது மகத்தான பொறுப்பை அவர்கள் உணர்ந்து தமது அறிவையும் தாம் கையாளும் கருவிகளையும் சமாதானத்தை வளர்ப்பதற்குப் பயன்படுத்துவார்களாக.

# பெற்றோரே! பிள்ளைகளில் விழிப்புடையவராயிருங்கள்

சென்றவாரம் மொறட்டுவா பகுதி விசாரணைப்பங்குக் குருவானவர் தம் பகுதிப் பெற்றோருக்கு அளித்த ஞாயிறுதின உபதேசம்: “பெற்றோரே, உமது பிள்ளைகளில் விழிப்புடையவராயிருங்கள்” என்பதே. இது எமது நாடுமுழுவதுக்கும் இன்றுமிகப் பொருத்தமானதாகும். “தேவன் பெற்றோருக்குக் கொடுத்த செல்வங்களாகிய பிள்ளைகளை மிக விழிப்புடன் கவனித்து அவர்களைத் தேவனுக்கு உகந்தவர்களாகவும், நாட்டுக்குச் சிறந்த பிரசைகளாகவும் வளர்த்துவரப் பெற்றோர் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இக்காலத்தில் பெற்றோரின் பெரும்பாலார் இக்கடமையில் தவறி வருகின்றார்கள். இன்று நாட்டில் தலைகாட்டிய பயங்கரவாதிகளின் இயக்கத்துக்காக பெற்றோர் தம் கடமையிலிருந்து தவறியதே காரணமாகும். ஆகவே, பெற்றோராயினர், இந்நிலைமைக்கு காரணமாக இளைஞரைச் சுட்டிக்காட்டாது, தாமே காரணமெனக் கருதி தம்பிள்ளைகளை விழிப்புடன் வளர்த்து வருவார்களாக” என்றார் சுவாமியவர்கள்.

## ஒரு கன்னிகாஸ்திரியின் அரிய பேறு

அயர்லாந்து தேசத்தில் மிகவிருத்தாப்பிய கன்னிகாஸ்திரியாயிருந்த சங்கைக்குரிய மேரி, கொன்சாகா ஹெயிடன் தாயார் நாலு மாதங்களின்முன் காலமானார் என்ற செய்தி கிடைத்திருக்கின்றது. இறக்கும்போது அவருக்கு வயது 104. தன்வாழ்நாளில் 88வருடங்களாக கன்னிகாஸ்திரியாகத் தொண்டாற்றியிருக்கின்றார். இவருடைய குடும்பத்தில் பல சகோதர சகோதரிகளும் தேவஊழியத்தில் காலத்தைக் கழித்தவர்கள். சில வருடங்களின்முன் காலஞ்சென்ற அவுஸ்திரேலியதேச அதிமேற்றிராணியார் ஹெயிடன் இவரது சகோதரன். இன்னுமொரு சகோதரன் சிட்னி நகரில் குருத்தொண்டாற்றுகின்றார். கன்னியாஸ்திரிகளாக வேறு இருவரும் இவரது குடும்பத்தில் உளர். இப்புனித கன்னிகாஸ்திரியார் தர்மசகோதரிகள் என்ற கன்னிகாசபைக்குச் சேர்ந்தவர்.

## உலக தொடர்புச்சாதன தினம் வைகாசி 23-ம் திகதி

பரிசுத்த தந்தை உலக தொடர்பு சாதன தினம் என ஒரு விசேஷ தினத்தை 5வருடங்களின்முன் நியமித்து அந்நாளில் சமயவிருத்திக்காக, உலக பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை ஒன்றுகப்பிணிக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், வானொலி, சினிமா, தொலைக்காட்சி முதலாம் சாதனங்களை தேவதொண்டுக்கு அபிவிருத்தி செய்ய ஊக்கம் கொடுக்கும் தினமாகக் கையாளவிண்ணப்பித்திருக்கின்றார். இவ்வருடம் அத்தினம் இம்மாதம் 23-ம் திகதி ஞாயிறுதினம் ஆகும். இவ்வருடத்தில் உலகசமாதானத்துக்காக உலகதொடர்புச் சாதனங்கள் தங்கள் விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டுமென்பதே பிரதான நோக்கமாகும்.

## இன்றைய மாபெரும் பிரச்சினை

சென்றவாரம் பரிசுத்த தந்தை சம்பேதுருவானவர் சதுக்கத்தில் அளித்த பகிரங்கப் பேட்டியில் இன்றைய திருச்சபையின் மாபெரும் பிரச்சினை என்ன என்பதைக் குறிப்பிட்டார். உலகின் பல பாகங்களிலும் குருத்தொண்டுக்கும் கன்னியர் தொண்டுக்கும் தேவ அழைத்தல் குன்றிவருவதே அப் பிரச்சினை என்பதைக் கவலையுடன் தெரிவித்தார். தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்து அத் தொண்டுகளில் ஈடுபடுவதன் வீரத்தன்மையை இளைஞர் உணரச்செய்யவேண்டுமென்றும், தேவ அழைத்தலுக்கு இளைஞரை ஈடுபடுத்துதலில சகல கத்தோலிக்கர்களும் உதவி புரியவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**பாஸ்கா மலர் போட்டி**

அனுப்பிவிட்டீர்களா ...
உங்கள் விடைகளை ?

**நீடிக்கிறது : 31—5—71 வரை**



## செல்வி பிளசம் (ரோஜா) சாமுவேல்

அவர்களின்

## மறைவு

பாதுகாவலன் மகளிர் மன்ற ஆசிரியை செல்வி பிளசம் (ரோஜா) சாமுவேல் அவர்கள் இம்மாதம் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலமாயினர் என்பதை ஆழ்ந்த துயருடன் வாசகநேயர்கட்கு அறியத் தருகின்றோம். அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

❊ பூமியிலிருந்து சந்திரன் 2 லட்சத்து 50 ஆயிரம்மைல் தூரத்திலுள்ளது; வான வெளிக்கப்பல் ஒன்றின் மணித்தியாலவேகம் 25மைல்; அதனால் பூமியிலிருந்து செல்லுத்தாகப் பிரயாணஞ் செய்யும் ஒருவானவெளிக்கப்பல் சந்திரனைப்போய்ச்சேரப் 10 மணித்தியாலம்செல்லும்.

❊ சுவிடன்தேசம் ஒரு புரொட்டஸ்தாந்த நாடாகும். அங்கே தொண்டாற்றி வருகின்ற கத்தோலிக்க மேற்றிராணியாரும், சுதேச குருமார் அனைவரும் புரொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பியவர்கள்; அத்தேச நகரங்களில் ஒன்றான பிறெடெறிக்சானிலே 25,000 கத்தோலிக்கர் இருக்கின்றனர்; ஆனால், இவர்கள் தங்களுக்கு அதிகம் சமீபமாகவுள்ள கத்தோலிக்க கோவிலுக்குப் போக 50மைல் பிரயாணஞ் செய்யவேண்டும்.

❊ நமது ஆண்டவர் அறையுண்ட சிலுவைமரத்தின நெடுஞ்சட்டம் 10 முழ நீளமும், குறுக்குச்சட்டம 5 முழ நீளமுமுடையன; பிலாத்துவின் அரண்மனையிலிருந்து கல்வாரிமலைமட்டும் ஆண்டவர் சிலுவை சுமந்து சென்ற பாதை 2,640 அடி நீளமானது; அவர் மாணுவஸ்தைப்பட்ட ஜெத்செமெனிய பூங்கா 150 அடி நீளமும், 60 அடி அகலமுமானது.

❊ சென் வின்சென்ற் டி போல்தீவு 150 சதுரமைல் விஸ்தீரணமுடையது. 86,000 குடிசனங்களைக் கொண்டது. ஆயினும், இது அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்தரையே அதிகமாக அடக்கியுள்ளது. ஆயினும், இங்கே ஐந்து விசாரணைப் பங்குகளில் 8 கத்தோலிக்கக் குருமாரும், 5 கிறிஸ்தியன் பிறதர்மாரும், மூன்று கன்னியாஸ்திரிமாரும் தொண்டாற்றி வருகிறார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: “கதலிக்பிறஸ்,” யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.